**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**பெரியகுளம்.**

**<u>அசல் வழக்கு எண். 100/2019</u>** **நாள். 23.01.2026**

**<u>வாதி தரப்பு சாட்சி எண்.</u> 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவமணி | ஊர் | : | பூதிப்புரம் |
| தந்தை பெயர் | : | கண்ணையகவுண்டர் | தாலுகா | : | போடி |
| தொழில் | : | ஓய்வு பெற்ற காவல் உதவி ஆய்வாளர் | வயது | : | 68/2026 |

ஆணையுறுதி சட்டப்படி, மொழிப்பெயர்பாளர் செல்வி. சுதாமணி மூலமாக சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். 1908 ம் ஆண்டு, சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு கட்டளை XVIII விதி 4 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வாதி தரப்பில் 1 ம் சாட்சியின் முதல் விசாரணை</u>:**

நான் இந்த வழக்கின் 1 ஆம் வாதி ஆவேன். மற்ற வாதிகளுக்காவும் சேர்த்து எனது தரப்பில் நிருபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நான் தாக்கல் செய்யும் நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் யாவும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எனது நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானவைகள் ஆகும். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை

தாக்கல் செய்கின்றேன். அவற்றை வாதி தரப்பு சான்று ஆவணங்களாக அங்கீகரித்து கொள்ள வேண்டி பிரார்த்திக்கிறேன்.

1. 16.11.2000 ஆம் தேதியிட்டு கூட்டுரிமையாளர்கள் அனைவரின் பெயரில் உள்ள நில உரிமை பதிவேடு நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. அது **வா.சா.ஆ.1**

2. 13.02.2025 ஆம் தேதியிட்டு பட்டா எண்.199 க்கான சிட்டா கணிணி நகல் புல வரைப்படத்துடன் கூடியது. **வா.சா.ஆ.2**

3. 24.07.2025 ஆம் தேதியிட்டு பட்டா எண். 92 க்கான சிட்டா கணிணி நகல் **வா.சா.ஆ.3**

4. இவ்வழக்கின் பிரதிவாதியான சுபாஷினி என்பவர் வாதியாக இருந்து தாக்கல் செய்த அசல் வழக்கு எண்,100/2019 ன் பிராது சார்பு செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.4.**

5. 15.03.2024 ஆம் தேதியிட்டு IA.No. 2/2024 in OS.No.100/2019 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் இணையதள நகல் **வா.சா.ஆ.5**

6. 26.11.2024 ஆம் தேதியிட்டு IA.No. 4/2024 in OS.No.100/2019 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் இணையதள நகல் **வா.சா.ஆ.6**

7. 20.08.2024 ஆம் தேதியிட்டு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை CMA(MD). No. 334/2024 மற்றும் CMP(MD) No. 4603 and 5754/2024 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் இணையதள நகல் **வா.சா.ஆ.7**

8. 20.08.2024 ஆம் தேதியிட்டு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை CRP(MD) No. 999/2024 and CMP(MD) No.5403/2024 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் இணையதள நகல் **வா.சா.ஆ.8**

9. 28.07.2025 ஆம்தேதியிட்டு நீதிமன்ற உத்தரவு அவமதிப்பு செய்யததாக பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு நகல் மற்றும் அந்த அறிவிப்பு திருப்பப்பட்ட கவர் அசல் அஞ்சலக உறையுடன் **வா.சா.ஆ.9**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

SANKAR

Digitally signed by SANKAR
Date: 2026.01.23 12:46:04 +0530

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**பெரியகுளம்.**